**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), பொள்ளாச்சி**

2023 ம் ஆண்டு ஜூலை திங்கள் 24 ஆம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.02/2022 இன் அ.வ.எண்.401/2022**

பொள்ளாச்சி தாலூக்கா, மன்னூர் அஞ்சல், R.கோபாலபுரம், சுங்கம், மெயின் ரோடு, எண்.143 & 143–A என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 50 வயதுடைய திரு.பழனிச்சாமி மகன் திரு. P.ஆனந்தன்.

.... மனுதாரர் / வாதி

/ எதிர் /

பொள்ளாச்சி தாலூக்கா, மன்னூர் அஞ்சல், R.கோபாலபுரம், சுங்கம், மீனாட்சிபுரம் (சாலை), குமார் மருந்துக்கடை என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 65 வயதுடைய திரு.பாலகிருஷ்ணன் மகன் திரு.ராஜ்குமார்.

.... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

மனுச்சொத்தின் மீதான மனுதாரரின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்களோ அல்லது வகையறாக்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்றும், வழக்கு சொத்தின் மேற்குபுறம் அமைந்துள்ள வடக்கு தெற்கு பொதுசுவற்றை சேதப்படுத்திவிட கூடாது என்றும், இவ்வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 03.11.2022.

இம்மனுவானது கடந்த 13.07.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ஜம்புலிங்கம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சத்ய

நாராயணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்கறிஞரின் வாதுரையைக் கேட்டும், இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்...

## இறுதி உத்தரவு

முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுச்சொத்தில் மேற்குபுறம் அமைந்துள்ள வடதெற்கு பொதுசுவற்றை சேதப்படுத்தி எதிர்மனுதாரரோ, அவரது ஆட்களோ மனுச்சொத்தில் மனுதாரர் கொண்டுள்ள சுவாதீனத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என்று இவ்வழக்கு முடியும்வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

## சொத்துவிபரம்

கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், இராமபட்டணம் கிராமம் புலத்தில் 151 நெ. பட்டா க.ச.49/2 நெ.காலை பு.ஏ.19.13 இதில்,

பொள்ளாச்சி பாலக்காடு ரோட்டுக்கும் ... தெற்கு,

என்.வி.கோபால், என்.வி.முத்துராஜ்
ஆகியோர் வீட்டுக்கும் ... கிழக்கு,

ஜி.எம்.மனோகரன் பட்டா பூமிக்கும் ... வடக்கு,

அங்கமுத்து செட்டியார் வீட்டுக்கும் ... மேற்கு

இதன் மத்தியில்,

கிழமேலடி வடபுறம் – 17 1/4

தென்புறம் – 19

மத்தியில் – 18

தென்வடலடி கிழபுறம் – 70

மேல்புறம் – 71

இந்த அளவுகள் கொண்ட 1269 சதுரடிக்கு 117.90 சதுரமீட்டர் விஸ்தீரணமுள்ள இடமும், மேற்படி இடத்தில் 839 சதுரடிக்கு 77.94 சதுரடி மீட்டரில் கட்டப்பட்டுள்ள கிழக்குப் பார்த்துக் கட்டியுள்ள வில்லை வீடும். பின்னும் 163 சதுரடிக்கு 15.14 சதுர மீட்டரில் வடக்கு பார்த்துக் கட்யுள்ள ACC சிமெண்ட் ஷீட் வீடும், இவைகளைச் சேந்த கதவு நிலவு கட்டுக்கோப்பும், முன்பின் வாசல் புறவடை வகையறராவும், மேற்படி வீட்டிற்கு S.C.Nos. 03-392-005-165, 03-392-005-248ன் படி இணைத்துள்ள மின் இணைப்புகளும் அதன் டெபாசிட் தொகைகள் மற்றும் உபகரணங்கள் வகையராவும். மேற்படி வீட்டிற்கு இணைந்துள்ள குடிநீர்க் குழாய் இணைப்பும் இதன் டெபாசிட் தொகை மற்றும் உபகரணங்கள் வகையறாவும், லெட்டின் பாத்ரூம் வகையராவும், மேல்புற சுவற்றில் பொதுவில் சரிபாதியும் மேற்படி சொத்துக்கு என்.வி.கோபால், என்.வி.முத்துராஜ் கிரயம் பெற்றுள்ள வீட்டுக்கும் மேல்புறம், கிழமேலடி தென்புறம் 4 அடி வடபுறம் 3 1/2 அடி, தென்வடல் 71 உள்ள பொது தடத்தில் தென்வடலாக சென்று தென்கோட்டில் கிழமேலாக போகவர உண்டான தடபாத்தியமும் சகிதம். கதவு எண் 5/50ல் ஓர் பாகம். வரி விரிப்பு எண் 256ல் ஓர் பாகம். புதிய கதவு எண் 5/51. தற்போது புதிய கதவு எண் 2/143 வரிவிதிப்பு எண் 550.

மேற்படி சொத்துக்கள் தற்போது பட்டா எண் 443 க.ச.49/2A2 நெ.பு.ஹெக்.0.02.0க்கு ஓர் பாகமாக கட்டுப்பட்டது.

இவ்வுத்தரவு 2023ம் வருடம் ஜூலை திங்கள் 24ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/- N. பாரதிராஜன்**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
பொள்ளாச்சி.

------------------------------------------------------

<u>இறுதி உத்தரவு</u>

ஐ.ஏ.02/2022 இன் ஓ.எஸ்.401/2022

நாள் : 24.07.2023

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

------------------------------------------------------